**செய்தி வெளியீடு எண் : 2386** **நாள் : 01.12.2023**

**'திராவிடப் பேரொளி' அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை திறந்து வைத்ததையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு**

தமிழன் – திராவிடன் ஆகிய இரண்டையும் அரசியல்களத்தில் அடையாளச் சொற்களாக மாற்றிய 'திராவிடப் பேரொளி' அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் திறந்து வைத்தேன்.

அயோத்திதாசரின் நூல்கள் நாட்டுடைமை.
ரூ.10 லட்சம் பரிவுத்தொகை வழங்கல்.
அயோத்திதாசர் அஞ்சல் தலை வெளியீடு.
அவர் நடத்திய தமிழன் இதழுக்கு நூற்றாண்டு விழா.
அவர் பெயரிலான சித்த மருத்துவ ஆராய்ச்சி மையத்துக்கு நிலம் ஆகியவற்றை நிறைவேற்றியது தி.மு.க ஆட்சியே!

ஆதி திராவிடர் குடியிருப்புகளை மேம்படுத்த "அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்" வரும் ஐந்தாண்டுகளில் 1000 கோடி ரூபாய் செலவில் நமது திராவிட மாடல் அரசால் செயல்படுத்தப்பட உள்ளது. புத்தரை 'இரவு பகலற்ற ஒளி' எனப் போற்றிய பண்டிதரின் சிந்தனைகளும் அத்தகைய ஒளியாகத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்படட்டும்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in